Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 25, 2024

திங்கட்கிழமை மார்ச் 25, 2024 | ஒளி: 09 கதிர் 219 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

4/21 தாக்குதல் உண்மைகள் தெரிந்தால் "உடனே கூறுங்கள்"

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள்

உண்மையை வெளிப்படுத்தும் தேசிய சர்வதேச பங்குதாரர்களை ஈடுபடுத்திக் கொண்ட விசாரணை ஊடாக உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவர்கள் தொடர்பில் தனக்கு உண்மை தெரியுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்த வெறுக்கத்தக்க பயங்கரவாதச் செயலுக்குக் காரணமானவர்கள் யார் என்பதை அறிய தான் உட்பட 220 இலட்சம் மக்கள் காத்திருக்கும் நிலையில், இனியும் காத்திருக்காமல் உயிர் தியாகம் செய்த அப்பாவி மக்களுக்காக உண்மையை வெளிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுப்பதாகவும்,இதன் உண்மைகளை உடனடியாக வெளிப்படுத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகள் தொடர்பில் தான் தகவலை வெளியிடும்போது அதனை மிகவும் இரகசியமாக வைத்திருக்க வேண்டியது நீதிபதிகளின் பொறுப்பாகும்

4/21 தாக்குதல் விவகாரம்

மைத்திரியிடம் சி.ஐ.டி விசாரணை

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதியன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்தியது யார் என்பது தனக்கு தெரியுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்து தொடர்பில், குற்றப்புலனாய்வு (சி.ஐ.டி) பிரிவினர், அவரிடம் வாக்குமூலம் பெற்று விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

4/21 குண்டு வெடிப்புக்கு மைத்திரி ஒத்துழைப்பா?

பிள்ளையானுக்கு கடும் சந்தேகம்

கனகராசா சரவணன்

முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றாரா? என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டு. எனவே, அவர் துணிந்த நேர்மையான அரசியல் தலைவராக இருந்தால், யார் என்பதை அவர் வெளிப்படையாக, விரைவாக ஊடகங்களில் ஊடாக வெளிப்படுத்த வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

McDonald's க்கு தடை

McDonald's வர்த்தக நாமத்தின் கீழ், கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இயங்கி வரும் 12 உணவகங்கள் இயங்குவதற்கு தடை விதித்து கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. அவர்களது உடன்படிக்கைகளில் ஏற்பட்ட முரண்பாடு தொடர்பில் ஆதார நிறுவனம் முறைப்பாடு செய்ததையடுத்து இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

பிரதமர் தினேஸ் சீனாவுக்கு விஜயம்

எதிர்வரும் 25ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பிரதமர் தினேஸ் குணவர்தன, எதிர்வரும் 30ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்து பல தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விஜயத்தின்போது, சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை செலுத்த வேண்டிய மொத்த வெளிநாட்டு கடனில் சீனா 10 சதவீதத்தை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச கொள்கைகளை ஏற்கும் வடக்கு எம்.பிக்களுக்கு நிதி

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்தார்

யது பாஸ்கரன்

"நான் என்றும் சுயநலத்துக்காகவோ அல்லது அரசியல் நோக்கத்துக்காக எவரையும் வற்புறுத்துவதோ திணிப்பதோ கிடையாது. அதுமட்டுமல்லாது, அவ்வாறான நிலையிலிருந்து மக்கள் பணிகளைச் செய்வதை நான் விரும்புவதும் கிடையாது மாறாக அனைத்தும் மக்களுக்குமாக வழங்கப்படும் திட்டங்கள் உச்சபட்சமாகப் பயன்கிடைக்க வேண்டும் என்ற நிலையில் இருந்துதான் நான் செயற்படுகின்றேன்" என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

காலம் நீடிப்பு

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவிடம் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை அரசாங்கம் நீட்டித்துள்ளது.

அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏப்ரல் 15ஆம் திகதிக்கு முன் அளிக்க வேண்டும் என்று முன்பு தெரிவிக்கப்பட்டது. இதனால் மேலும் இரண்டு மாதங்கள் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஜூன் 15ம் திகதி அறிக்கை கையளிக்கவேண்டும்.

இந்திய பெரிய வெங்காய ஏற்றுமதி தடை நீடிப்பு

இலங்கையில் விலை கூடும் சாத்தியம்

பெரிய வெங்காயம் ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடையை மறு அறிவித்தல் வரை நீடிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், உள்நாட்டில் வெங்காயம் அதிக அளவில் இருப்பில் இருப்பதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசு கூறுகிறது.

தொடர்ச்சி P2

பால்மா குறையும்

நுகர்வோர் மீதான நிதிச் சுமையைக் குறைக்கும் நோக்கில், இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலையில் கணிசமான அளவு குறைக்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அறிவித்தார்.

இதன்படி, ஒரு கிலோ கிராம் நிறையைக் கொண்ட பால்மா பக்கெட்டுக்கு 150 ரூபாய் குறையவுள்ளதாக அமைச்சர் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும், 400 கிராம் பக்கெட்டுகளுக்கு ரூ. 60 சதவீதம் விலை குறையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இன்று சந்திர கிரகணம்

2024ஆம் ஆண்டின் முதலாவது சந்திரகிரகணம் இன்று திங்கட்கிழமை(25) அதாவது மார்ச் 25 ஆம் திகதி நிகழவுள்ளது. பங்குனி உத்திரமும் இன்று (25) கொண்டாடப்படுகிறது. பங்குனி உத்திரத்தில் சந்திர கிரகணம் 100 ஆண்டுகளுக்குப் பின் வருகிறது. அதுமட்டுமின்றி ஹோலி பண்டிகையும் இன்று (25) கொண்டாடப்படுகிறது. இதனால் சந்திர கிரகணம் கூடுதல் சிறப்பு வாய்ந்தது.

சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர் கோட்டில் வரும்போது கிரகணம் ஏற்படுகிறது.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும் நிலையில், சூரியனின் நேரடிக் கதிர்கள் சந்திரனை ஒளிரவிடாமல் தடுக்கும் போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது.

இன்று (25) வரும் சந்திர கிரகணம் இந்த ஆண்டின் முதல் சந்திர கிரகணம் ஆகும். இந்த சந்திர கிரகண நிகழ்வானது காலை 10:23 மணிக்குத் தொடங்கி மாலை 4:39 மணிக்கு முடிவடைகிறது.

இன்று முதல் மதிய உணவு

தரம் 1 முதல் தரம் 5 வரை கல்விப்பயிலும் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் திங்கட்கிழமை (25) முதல் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

புதிய மாற்றத்திற்காக கலந்துரையாடல் அவசியம்

ஜனாதிபதி தெரிவிப்பு

நவீன மருத்துவ சேவைகளுக்கு உகந்த வகையில் புதிய தொழில்நுட்ப மாற்றங்களுக்கு அமைய எமது நாட்டின் சுகாதார சேவையில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய மாற்றங்கள் குறித்து விரிவான கலந்துரையாடலை நடத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நைஜீரியாவில் கடத்தப்பட்ட பாடசாலை மாணவர்கள்

300 பேரும் இரண்டு வாரங்களுக்கு பின் விடுவிப்பு

நைஜீரியாவின் சில பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளை ஆயுதக் குழுக்கள் கடத்திச் சென்று மிரட்டும் நிகழ்வுகள் சமீப காலமாக அதிகரித்து வருகின்றன. கடந்த 7ஆம் திகதி கதுனா மாநிலத்தில் உள்ள ஒரு பாடசாலையிலிருந்து கிட்டத்தட்ட 300 மாணவர்களை ஆயுதக்குழுவினர் கடத்திச் சென்றனர். அவர்களை மீட்கும் முயற்சியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டனர். கடத்தப்பட்ட மாணவர்கள் அடர்ந்த காட்டுப்பகுதியில் பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கலாம் என தகவல் வெளியானது.

"எந்த பாதிப்பும் இன்றி விடுதலை செய்வதற்காக நடவடிக்கை மேற்கொண்ட நைஜீரிய ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதாக ஆளுநர் உபா சானி தனது செய்தியில் தெரிவித்துள்ளார்

அதன்பின்னர் கடந்த வாரம் ஜுரு கவுன்சில் பகுதியில் துப்பாக்கிகளுடன் நுழைந்த ஆயுதக்குழுவினர், டோகன் நோமா சமுதாய மக்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன், 14 பேரை கடத்திச் சென்றனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

"உடனே கூறுங்கள்"

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில், வெளிப்படையான, பாரபட்சமற்ற மற்றும் உண்மையை வெளிப்படுத்தும், தேசிய சர்வதேச பங்குதாரர்களை ஈடுபடுத்திக் கொண்ட விசாரணை ஊடாக உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம். இதில் தொடர்புடையவர்கள் அனைவரும் எந்த பதவி நிலைகளில் இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுக் கூடிய தண்டனை வழங்கப்படும் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 131ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் ஹம்பந்தோட்டை, லுனுகம்வெஹர அபயபுர கனிஷ்ட வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(24) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த மாற்றுத் தலைவர்களைப் போல் நான் பிறரிடம் கால்சட்டை கேட்க மாட்டேன். மக்கள் நலனுக்காக என் கைவசம் இருப்பதைக் கொடுப்பேன். மாற்றுத் தலைவர்கள் மற்றவர்களிடம் இருந்து பொருட்களைப் பெற்றுக்கொண்டு சுகபோக, ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

சஜித் பிரேமதாச பொது நலன் கருதிப் பகிர்ந்தளிப்பது அவர்களின் பார்வையில் பிழையாகத் தெரிகிறது.இது அரசியல் பொறாமைத்தனம் என அவர் தெரிவித்தார்.

பிறர் வழங்குவதை அணிய முடியுமானவர்களுக்கு அது சரி. சஜித் பிறருக்குப் பகிர்ந்தளிப்பது பிழை. சமூகப் பாதுகாப்பு நலன் திட்டங்கள் குறித்த போதிய புரிதல் அற்றவர்களே இவ்வாறான பார்வையில் தம்மை விமர்சித்து வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

மைத்திரியிடம் சி.ஐ.டி விசாரணை

மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடு மற்றும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் விடுத்துள்ள கட்டளைக்கு அமையவே, சி.ஐ.டியினர் ஞாயிற்றுக்கிழமை (24) விசாரணைகளை முன்னெடுத்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தனது ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்ட தரப்பினருக்கு எதிராகவே தற்போது வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று முன்னாள் ஜனாதிபதி நேற்று (22) கண்டியில் நடைபெற்ற மத நிகழ்வின்போது தெரிவித்திருந்தார்.

கண்டியில், வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ராஜபக்ஷ குடும்பத்தினரே நாட்டைப் பாரிய பிரச்சினைக்கு இட்டுச் சென்றனர் என்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் அனைவரும் அறிந்துள்ளனர் என்றும் கூறியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகள் தொடர்பில் தான் தகவலை வெளியிடும்போது அதனை மிகவும் இரகசியமாக வைத்திருக்க வேண்டியது நீதிபதிகளின் பொறுப்பாகும் என்றும் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்குத் தெரியும். நீதிமன்றத்தால் கோரிக்கை விடுக்கப்படுமாயின் அல்லது உத்தரவிடப்படுமாயின் அது தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துவதற்குத் தான் தயார் என்று முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த கருத்து தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில், பொலிஸ் மா அதிபர் விடுத்த பணிப்புக்கு அமையவே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், குற்றப்புலனாய்வு பிரிவினர் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

4/21 குண்டு வெடிப்புக்கு மைத்திரி ஒத்துழைப்பா?

இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்டர் படுகொலை இன - மத நல்லிணக்கம் அறிதலும் புரிதலும்" நூல் வெளியீட்டு விழா, மட்டக்களப்பு அஞ்சனா மண்டபத்தில் சனிக்கிழமை (23) இடம்பெற்றது. நூல் வெளியீட்டுக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தியவர்களை தனக்குத் தெரியுமெனத் தெரிவித்திருந்ததை ஊடகங்களில் நான பார்த்தேன். ஒரு சாதாரண மனிதனைப்போல முன்னாள் ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன பேசுகின்றார். இந்த குண்டு வெடிப்பு இடம்பெறுகின்ற போது அவர் நாட்டின் தலைவராக இருந்தார். யாராக இருந்தாலும் தேடி கண்டுபிடித்து கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தியிருக்க வேண்டியது தலைவருடைய பொறுப்பாகும் என்றார்.

ஆனால், அவர் அதைவிட்டுவிட்டு இப்போது இரகசிய வாக்குமூலம் கொடுக்க வேண்டும் என கருத்துக்களைச் சொல்லுகின்றார். எனவே, ஒரு வேடிக்கையான மனிதரை இந்த நாட்டு அரசியலுக்குக் கொண்டுவந்துள்ளோம் என்பதையிட்டு நாங்கள் வெட்கப்படவேண்டும்.

இரகசிய வாக்குமூலம் தேவையென ஏன்? கேட்கிறார். யாருக்கு அஞ்சுகின்றார். அப்படியென்றால் இந்த குண்டு வெடிப்பிற்கும் அவரும் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றாரா? என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டு ஆகவே, அவர் ஒரு துணிந்த நேர்மையான அரசியல் தலைவராக இருந்தால் யார் என்பதை வெளிப்படையாக விரைவாக ஊடகங்களில் வெளிப்படுத்தவேண்டும் என்றார்.

McDonald's க்கு தடை

மெக்டொனால்ட் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாகவும், பெயர் பலகைகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் சமூக ஊடக பாவனையாளர்கள் பலரும் பதிவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கொட்டாஞ்சேனை, நுகேகொட, கிரிபத்கொட, பத்தரமுல்ல, கொள்ளுப்பிட்டி, ராஜகிரிய, வெலிசறை, கல்கிசை, கொழும்பு சிட்டி சென்டர், கல்கிஸை, மற்றும் ஷங்ரி-லா ஆகிய இடங்களில் உள்ள உணவகங்களில் மெக்டொனால்ட் உணவு மற்றும் மெனு பொருட்களை விற்பனை செய்வதை ருசி பெஸ்டோன்ஜி நிறுவனத்திற்குத் தடை விதித்து வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி சுமித் பெரேரா மேலும் உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த தடை உத்தரவு ஏப்ரல் 4ஆம் திகதி வரை அமலில் இருக்கும்.

300 பேரும் இரண்டு...

இதேபோல் கஜுரு-ஸ்டேசன் சமுதாய மக்கள் மீது தாக்குதல் நடத்தி 87 பேரைக் கடத்திச் சென்றனர்.

இந்நிலையில், கடத்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டதாக கதுனா மாநில ஆளுநர் , ஞாயிற்றுக்கிழமை(24) தெரிவித்துள்ளார். கரிஜா நகரில் இருந்து கடத்தப்பட்ட 287 மாணவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும், மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் இன்றி விடுதலை செய்வதற்காக நடவடிக்கை மேற்கொண்ட நைஜீரிய ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஆளுநர் உபா சானி தனது செய்தியில் தெரிவித்துள்ளார். 2014ஆம் ஆண்டில் இது இடம்பெறும் இதுபோன்ற கடத்தல் சம்பவங்கள் அரசுக்கு பெரும் தலைவலியாக உள்ளது.

இந்திய பெரிய வெங்காய ஏற்றுமதி தடை நீடிப்பு

கடந்த டிசெம்பரில், இந்திய அரசு பெரிய வெங்காய ஏற்றுமதிக்குத் தடை விதித்தது, எதிர்வரும் 31ம் திகதியுடன் இந்த தடை முடிவடைய இருந்தது. பெரிய வெங்காய ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டதால், இந்தியச் சந்தையில், பெரிய வெங்காயத்தின் விலை வேகமாகச் சரிந்தது. எதிர்வரும் தேர்தலைக் குறி வைத்து, விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஏற்றுமதி தடையை நீடிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகளவில் வெங்காய ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்த தடை காரணமாகப் பல நாடுகளில் வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. இலங்கையில் பெரிய வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்து வருவதற்கு இந்தியா விதித்துள்ள தடையே பிரதான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இன்று முதல் மதிய உணவு

நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களில் 1,700,000 மாணவர்களுக்கு இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த வேலைத்திட்டத்திற்காக 26 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரச கொள்கைகளை ஏற்கும்...

2024ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட நிதி ஒதுக்கீட்டில் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள முன்மொழிவுகள் தொடரில் ஆராயும் முன்னாயத்தக் கூட்டம் யாழ். கிளிநொச்சி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களுக்காக கிடைக்கின்ற திட்டங்களாக நடைமுறைப்படுத்துவதை விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இக்கூட்டம் நடைபெறுகின்றது.

இதேவேளை, அரச கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி விசேட நிதி ஒன்றை வழங்க முன்வந்துள்ளார்.

அந்த வகையில் கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை மக்கள் நலனுக்காகப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.

இது திணிப்போ அல்லது அரசியல் நோக்குடையதோ அல்ல என்றும்

நான் சுயநலத்துக்காக அல்லது அரசியல் நோக்கத்துக்காக எவரையும் வற்புறுத்துவதோ திணிப்பதோ கிடையாது. மாறாக அரசியல் இலபத்துக்காக செயற்றிட்டங்களையும் முன்னெடுப்பதையும் விரும்புவதில்லை.

அனைத்தும் மக்களுக்கும் பயன்கள் உச்சபட்சமாகக் கிடைக்க வேண்டும் என்ற நிலையில் இருந்துதான் இவற்றைப் பார்க்கப்பட வேண்டும். கடந்த 3 வருடங்களாக பன்முகப்படுத்தப்பட்ட நிதி கிடைக்கவில்லை. ஆனால், தற்போது அது 320 மில்லியன் ரூபாய் எமது மாவட்டத்திற்குக் கிடைத்துள்ளது. அந்தவகையில் கிடைத்துள்ள இந்த நிதியூடாக மக்களுக்கு உச்சபட்சமான பயன் கிடைக்கச் செய்வதே எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என தெரிவித்திருந்தார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட பதில் அரச அதிபர், மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர், சமூர்த்தி உதவி ஆணையாளர், பிரதேச செயலர்கள் பிரதேச சபைகளின் செயலாளர்கள் துறைசார் அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

புதிய மாற்றத்திற்காக...

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் சனிக்கிழமை (23) நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் "தலைமைத்துவம் மற்றும் திறன் மேம்பாடு" என்ற தலைப்பில் ஒரு நாள் செயலமர்வு பொலன்னறுவையில் ஆரம்பமானது. உத்தியோகபூர்வ நிகழ்வு ஒன்றில் பங்கேற்க பொலன்னறுவைச் சென்றிருந்த ஜனாதிபதிக்கு, இந்நிகழ்வில் இணைந்துகொள்ள திடீர் அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன்படி, சொற்ப நேரத்திற்கு அவ்விடத்திற்குச் சென்ற ஜனாதிபதி, அரச வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். இலங்கையில் காலனித்துவக் காலத்திலிருந்து இலவச மருத்துவ முறைமை காணப்படுவதாகவும், அதனை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்த கடந்த கால அனுபவங்களுடன் நாட்டில் தரமான மற்றும் உயர்தர சுகாதார சேவைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

சுகாதார சேவையில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் 10 முதல் 15 ஆண்டுகளுக்குள் இந்தப் புதிய மாற்றங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்காக சுகாதாரத் துறையிலுள்ள அனைவருடனும் பரந்த உரையாடலை நடத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். அதற்கான யோசனைகளையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, இந்த கலந்துரையாடல்கள் அனைத்தையும் அரசியல்மயப்படுத்தாமல் தர்க்கரீதியாக மேற்கொள்வதன் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

"இனத்தை கட்டியெழுப்ப தேசமாக செயற்படுவோம்"

ரெலோவின் மாநாட்டில் பிரகடனம்

க. அகரன்

எமது இனத்தைக் கட்டி எழுப்பும் பணியில் ஒரு தேசமாக முழு முயற்சியோடு ஈடுபடுவது என்று இந்த மாநாட்டினூடாக பிரகடனப்படுத்துவதாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 11ஆவது தேசிய மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(24) இடம்பெற்றது. இதன்போது இயக்கத்தின் மாநாட்டுப் பிரகடனத்தைப் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் உத்தியோகப்பூர்வமாக அறிவித்தார்.

குறித்த பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது மக்களின் நீண்ட கால அரசியல் அபிலாசைகளான வடக்கு, கிழக்கு இணைந்த, தமிழர் தாயகத்தில், தம்மைத்தாமே ஆளுகின்ற, சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக் கூடிய, சுயாட்சி அரசியல் கட்டமைப்பினை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான அரசியல் வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பது என்றும் இந்த இலக்கை அடைவதற்கான நிரந்தர பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அந்தப் பொறிமுறையை இந்தியாவினுடைய மேற்பார்வையிலும் சர்வதேச நாடுகளின் பங்களிப்போடும் ஐநாவின் வழிநடத்தலோடும் புலம்பெயர் உறவுகளின் ஒருங்கிணைப்போடும் உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது.

அத்துடன் எமது தாயக பிரதேசத்தை எமது பாரம்பரிய வதிவிடமாகவும், எமது தனித்துவமான இன அடையாளத்தையும், தமிழ் மொழிக்கான அங்கீகாரத்தையும் உறுதிப்படுத்திய இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசியல் யாப்பில் திருத்தங்களோடு உருவாக்கப்பட்ட மாகாண சபை ஆட்சி முறைமையை முற்று முழுதாக நடைமுறைப்படுத்த அரசுக்குத் தொடர் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்தல்.

எமது இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை உட்பட மனித உரிமை மீறல்கள், யுத்த குற்றங்கள் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்களால் பாதிக்கப்பட்ட நீதி கோரி நிற்கும் எமது உறவுகளுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்கச் சர்வதேச நீதிப் பொறிமுறைக்காக தொடர்ந்தும் பாடுபடுவோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியைக் கோரி நிற்கும் எம் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வது. அரச இயந்திரங்களினால் எமது தாயக பிரதேசத்தில் தொடர்ந்து அபகரிக்கப்பட்ட வந்த காணிகளை விடுவிப்பதற்கும், தொடர்ச்சியாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பின் விளைவாக எமது வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவதாலும், பௌத்த சின்னங்களை நிறுவுவதன் ஊடாகவும் நமது மக்களின் வாழ்வாதாரத்தையும் இனக் குடிப் பரம்பலையும் சிதைத்து நமது சுயநிர்ணய உரிமைக்கான தகுதியைக் கேள்விக்குறி ஆக்க முயலும் செயல்பாடுகளுக்கு எதிரான சகல அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.

நமது இனக் குடிப்பரம்பலின் செறிவைப் பேண எமது எதிர்கால சந்ததிக்கான வளமான வாழ்வை உறுதிப்படுத்தி அதனூடாக எமது இனத்தின் இருப்பை தக்க வைக்க, எமது தாயக பூமியில் பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்யும் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்கி அதைச் செயல்படுத்த உரிய வேலைத்திட்டங்களை மேற்கொள்வது.

எமது இனத்தின் கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதோடு அவற்றை வளர்ப்பதற்கும் செழுமைப் படுத்தவும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதுடன் நமது மக்கள் நலன் சார்ந்து பிராந்திய அரசியல் உறவை வலுப்படுத்தவும், சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டவும் அதற்கான பூகோள அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும்.

மேற்கூறிய எமது மக்களின் நலன் சார்ந்த அரசியல் அபிலாசைகளையும் உரிமையையும் வென்றெடுப்பதற்குத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் உட்பட எமது தேசியத்தை நேசிக்கும் அனைத்து தமிழ் தரப்பினரையும் ஒன்றிணைத்துப் புலம்பெயர் உறவுகளையும் ஒருங்கு சேர்த்து ஒரு தேசமாக எமது இனத்தைக் கட்டி எழுப்பும் பணியில் முழு முயற்சியோடு ஈடுபடுவது என்றும் இந்த மாநாட்டில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் பிரகடனப் படுத்தி நிற்கிறது என்றுள்ளது.

கடற்படையினர் இருவர் கைது

■ எம்.றொஸாந்த்

யாழ்ப்பாணம் - காரைநகர் பகுதியில் கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடற்படை புலனாய்வு பிரிவைச் சேர்ந்த இருவரையும், அவர்களிடம் கஞ்சாவைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் நபர் ஒருவரையும் ஊர்காவற்துறை பொலிஸார் சனிக்கிழமை (23) கைது செய்துள்ளனர்.

கஞ்சா போதைப்பொருள் வியாபாரம் இடம்பெற்று வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், குறித்த மூவரையும் கைது செய்து 04 கிலோ கிராம் 400 கிராம் கஞ்சா போதைப்பொருளையும் மீட்டுள்ளனர்.

மேலும், சந்தேக நபர்களை ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தபோதே, கஞ்சாவை விற்பனை செய்ய முயன்ற இருவரும் கடற்படையைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

அவர்களை விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாசகத்தில் ஈடுபடும் சிறுவர்கள் அதிகரிப்பு

கதிர்காமம் புனித பூமியில் யாசகத்தில் ஈடுபடும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்த போதிலும், அவர்களது பெற்றோர்கள் பிள்ளைகளை மீண்டும் யாசகத்தில் ஈடுபடுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கதிர்காமம், செல்ல கதிர்காமம், கிரிவிகாரை ஆகிய பகுதிகளில் இந்த சிறுவர்கள் தனியாகவும் பெற்றோருடனும் யாசகத்தில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

5, 10, 16 வயதுக்குட்பட்ட பல சிறுவர்கள் பெற்றோருக்குத் தெரிந்தே யாசகத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த சிறுவர்கள் பல தடவைகள் திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சில சிறுவர்கள் பூஜை தட்டுக்களை விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சிறுவன் பாலியல் வன்புணர்வு: கான்ஸ்டபிள் கைது

வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப்பெற்றுவந்த 15 வயதும் 3 மாதங்களேயான சிறுவனை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப்பெற்ற சிறுவனே இவ்வாறு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறு வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்றுவரும் சிறுவன், பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில், வாட்டுக்குப் பொறுப்பான வைத்தியர், வைத்தியசாலை நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டுவந்த நிலையிலேயே, கடந்த 21ஆம் திகதியன்று அந்த கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

கான்ஸ்டபிள், மொனராகலை நீதவான் நீதிமன்றத்தில், வெள்ளிக்கிழமை (22) ஆஜர்படுத்தப்பட்டார். அவரை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகளில் விடுதலைச் செய்யுமாறு உத்தரவிட்ட நீதவான், 2024 ஜூன் 28ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

கோணேஸ்வரப் பெருமானின் கொடியேற்றம்

■ சஞ்ஜீவன் துரைநாயகம்

திருக்கோணேஸ்வரம் அருள்மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமானின் வருடார்ந்த பங்குனி உத்தர பிரம்மோற்சவம் ஞாயிற்றுக்கிழமை (24) காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 21 நாட்கள் இடம்பெறவுள்ள உற்சவத்தின் 17ஆம் நாள் செவ்வாய்கிழமை (09.04.2024) அன்று இரதோற்சவமும் புதன்கிழமை (10.04.2024) பாபநாச தீர்த்த உற்சவமும் இடம்பெற்று, மாலை துவஜா அவரோகணம் எனப்படும் கொடி இறக்க நிகழ்வும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் வியாழக்கிழமை(11) பூங்காவன திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை(12) தெற்போற்சவம் இடம்பெறவுள்ளது.

உற்சவ காலங்களில் காலை 8 மணிக்கும் மாலை 3:30 மணிக்கும் அபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து தம்ப பூசை, வசந்த மண்டப பூசை நடைபெற்று பகல் திருவிழாவின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வந்தும் மாலை திருவிழாவில் பின்னர் உள்வீதி, வெளி வீதி வலம் வந்தும் அடியார்களுக்கு அருள் காட்சி கொடுப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழி தவறிய வழிகாட்டி கைது

■ செ.தீவாகரன், டி.சந்ரு

வெளிநாட்டு சுற்றுலாப் பயண வழிகாட்டியொருவர் ஹாஷ் போதைப் பொருளுடன் நானுஓயா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் சனிக்கிழமை (23) இடம்பெற்றுள்ளது.

சிலாபம் - ஹலவத்த பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் நானுஓயா புகையிரத நிலையத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில், பயணப் பொதியொன்றுடன் சுற்றித்திரிந்ததை அவதானித்த பொலிஸார் அவரை பரிசோதனைக்குட் படுத்தியபோது, அவரிடமிருந்து 1.030 மில்லி கிராம் ஹாஷ் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

சந்தேகநபரை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சடலம் மீட்பு

■ ராமு தனராஜா

ஹப்புத்தளை- ஹிம்பிலியாகஹ எல்ல, பிட்டபொல பகுதியில் வீதியின் ஓரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் இருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போவத்தை இதழ்கஸ்ஹின்ன பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சடலத்தை நீதிவான் பார்வையிட்டதன் பின்னர் உடல் கூற்று பரிசோதனைக்காக தியத்தலாவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஹப்புத்தளை பொலிஸார் மேற்கொண்டுவருவதாகவும் தெரியவந்துள்ளது.

குருத்தோலை ஞாயிறு...

உலகவால் கிறிஸ்தவ மக்களின் விசேட வழிபாடுகளில் ஒன்றான குருத்தோலை ஞாயிறு வழிபாட்டுகள், சகல தேவாலயங்களிலும் உணர்வு பூர்வமாக ஞாயிற்றுக்கிழமை (24) முன்னெடுக்கப்பட்டன.

வ.சக்தி, பு.கஜிந்தன்

மட்டக்களப்பில்...

யாழ்ப்பாணத்தில்...

நடைபவனியும் விழிப்பூட்டல் கருத்தரங்கும்

காச நோய் பரவுதல் பற்றியும், அதைத் தடுப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மார்ச் 24ஆம் திகதி சர்வதேச காச நோய் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனையொட்டி, கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனியும் விழிப்பூட்டல் கருத்தரங்கும் சனிக்கிழமை(23) சாய்ந்தமருதில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வு "ஆம் எம்மால் காச நோயை இல்லாதொழிக்க முடியும்" எனும் தொனிப்பொருளில் பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.அப்துல் கபூர் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

மேலும், சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக ஆரம்பித்த நடைபவனி சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வரை சென்று வைத்தியசாலையில் விழிப்புணர்வு கருத்தரங்கொன்றும் இடம்பெற்றுள்ளது.

இதன்போது காசநோய் தொடர்பாகவும் அதற்கான அறிகுறிகள், அதிலிருந்து பாதுகாப்பு பெறுதல், சமூகத்தில் காசநோயை கட்டுப்படுத்த முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பத்திரகாளி அம்பாள் ஆலய தீர்த்தோற்சவம்

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய தீர்த்தோற்சவம் ஞாயிற்றுக்கிழமை (24) காலை இடம்பெற்றுள்ளது. இதன்போது, அம்பாள் ஆலயத்தில் இருந்து புராதன சிம்ம வாகனத்தில் சமுத்திரக்கரைக்கு சூரியோதயத்தில் எழுந்தருளி பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் பங்கேற்றிருந்தனர்.

– அப்துல்சலாம் யாசீம்

இளைஞர் எழுச்சி மாநாடு

■ ராமு தனராஜா

மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் எழுச்சி மாநாடு பசறை நூலக கேட்போர் கூட மண்டபத்தில், மலையக மக்கள் முன்னணியின் உப தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் கவுன்ஸில் உறுப்பினரும், முன்னாள் பசறை பிரதேச சபை உறுப்பினருமான கண்மணி சிவநேசன் தலைமையில் சனிக்கிழமை (23) இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில், பெருந்திரளான இளைஞர்கள் கலந்து கொண்டதுடன், பிரதம அதிதியாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டுள்ளார்.

பசறை பேருந்து தரிப்பிடத்தில் இருந்து அதிதிகள் அனைவரும் பசறை நூலக கேட்போர் கூடத்திற்கு அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், இசை நிகழ்ச்சிகள், கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் இளைஞர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிப்பு இடம்பெற்றுள்ளது.

நீதியை நிலைநாட்ட நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டு, 2024 ஏப்ரல் 21ஆம் திகதியுடன் ஐந்து வருடங்கள் நிறைவடைகின்றன. எனினும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரிய நீதி கிடைக்கவில்லை. நிவாரணங்களும் முறையாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன்னிறுத்தப்படவில்லை என்பதே உண்மை.

4/21 தாக்குதலுக்குப் பின்னர் ஆட்சிப்பீடமேறியவர்கள், விசாரணைகளை முன்னெடுக்கும் விதம் தொடர்பிலும், தங்களுடைய ஆட்சியின் போதும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் அதேபோல, குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கும் என்றெல்லாம் வாய்க்கூசாமல் கூறினர். எனினும், எதுவுமே நடக்கவில்லை. காலம்தான் கடந்துகொண்டே செல்கின்றது.

இந்நிலையில், கண்டியில், கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 'உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்குத் தெரியும். நீதிமன்றத்தால் கோரிக்கை விடுக்கப்படுமாயின் அல்லது உத்தரவிடப்படுமாயின், அது தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துவதற்குத் தான் தயார்" என்று தெரிவித்துள்ளார்.

இவேளை, மைத்திரிபாலவின், இந்த கூற்றுத்தொடர்பில் கருத்துரைத்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ "நீதிமன்றம் அழைக்கும் வரையிலும் காத்திருக்காது உண்மையை மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தவேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆக, இந்த விவகாரம் நீதிமன்றத்துக்கு சவால் விடுக்கப்பட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேனவின் இந்தக் கூற்று தொடர்பில், அரசியல் களத்தில் பல்வேறான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவரை கைது செய்யுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணித்துள்ளார். குற்றப்புலனாய்வு பிரிவினரும் மைத்திரியிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்த காலத்திலேயே உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அவருக்கு கீழ் இயங்கிய பாதுகாப்புத் தரப்பினருக்கு போதிய முன்னறிவித்தல்கள் கிடைத்திருந்த போதிலும், உரிய முன்னேற்பாடுகளை முன்னெடுக்கவில்லையென மைத்திரிக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்யத் தவறியவர் என்பதற்காக, குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கோடி ரூபாயை வழங்க வேண்டுமென உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பதால், அதற்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்புகூட அவருக்கு இருக்கவில்லை.

இந்நிலையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகள் தொடர்பில் தான் வெளியிடும் தகவல்களை மிகவும் இரகசியமாக வைத்திருக்கவேண்டியது நீதிபதிகளின் பொறுப்பாகும் என்று மிகவும் சிறுபிள்ளைத்தனமாக கருத்துரைத்துள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் நீதியைக் கோரிநிற்கும் நிலையில், இரகசியம் காக்கமுடியுமா? என்பதற்கெல்லாம் காலமே பதில் சொல்லும்.

எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்ட, நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

சொர்க்கத்தை நாங்கள் கண்டதில்லை. ஆனால், கடவுள் வந்து, சொர்க்கத்தைப் பற்றிக் கனவு காண்பவர்களிடம், "இந்த உலக வாழ்க்கை வேண்டாம்; சொர்க்கத்துக்கு வந்து விடுங்கள்" என கேட்டாலும், எவரும் சென்றுவிட மாட்டார்கள். "நாங்கள் இயற்கையாக இறக்கும் போது, எங்களைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றுதான் சொல்வார்கள்.

இந்த உலகமே வியத்தகு அழகானது அல்லவா? இயற்கை அழகு மட்டுமல்ல; செயற்கையாகவும் உலகை அழகாபுரியாக மாற்றிவிட்டார்கள். எம்மவர்களுக்குத் தாய் மண்ணைவிட, வெளிநாடுகளுக்குச் செல்வதே சொர்க்கமானது எனச் சொல்கிறார்கள்.

அங்குச் சென்றால், நல்ல வருமானம் கிடைக்கும். வசதி மிகுந்த வாழ்க்கை. இதை விட வேறு என்ன வேண்டும் எனச் சொல்லி அங்கலாய்க்கின்றனர். ஆனால், ஒவ்வொரு நாட்டுக்கும் பல்வேறு பெருமைகள் உண்டு. நமது தேசம் எமக்குப் பெருமை.

மேல் உலகத்தில் தேவர்களின் பக்கத்தில் இருந்து வாழ்தல் களிப்பானது என எண்ணியபடி, உழைப்பே இல்லாமல் சும்மா வாழும் இடம் எதுவெனத் தேடுபவர்கள் பற்றி என்ன சொல்ல முடியும்? வீணான கற்பனைத் தேடல்களை விடுத்து, நிஜத்துக்குள் பிரவேசியுங்கள் மக்களே!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

தோற்றது பிரேரணையா, சபாநாயகரா?

லக்ஸ்மன்

இலங்கையின் பாராளுமன்ற மரபு மிகவும் இறுக்கமானது. ஆனாலும், குற்றச்சாட்டுக்களும், நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் அதற்குள் குழப்பங்களை ஏற்படுத்துவது வழமையே. அதன் வரிசையில் கடந்த வாரத்தில் பெரும் குழப்பமாக மாறிய ஒரு பிரேரணைதான் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை.

சபாநாயகர் அல்லது அவைத்தலைவர் பாராளுமன்றத்தைத் தலைமை தாங்கும் நபர் ஆவார். பிரித்தானியாவின் 'வெஸ்ட் மின்ஸ்டர்' மக்களாட்சி முறைமையின் கீழ், அமைக்கப்பட்ட இலங்கை பாராளுமன்றத்தின் நாளாந்த அலுவல்களையும், அதன் முக்கிய கருமங்களையும் சபாநாயகரே கவனிப்பார்.

வரலாற்றில் அரசாங்க சபை, பிரதிநிதிகள் சபை, தேசிய அரசுப் பேரவை, பாராளுமன்றம் என 1931 முதல் தற்போது வரையில் 27 பேர் சபாநாயகர்களாகப் பதவி வகித்துள்ளனர். எமது நாட்டின் பதவித் தரநிலை அடிப்படையில் ஜனாதிபதி, பிரதமர் போன்ற பதவிகளுக்கு அடுத்ததாகப் பிரித்தானிய 'வெஸ்ட் மினிஸ்டர்' பாராளுமன்ற சம்பிரதாயத்தின் அடிப்படையில் உருவான சபாநாயகர் பதவி கௌரவமுடையதாக இருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபாநாயகராகத் தெரிவானால், தான் தெரிவு செய்யப்பட்ட கட்சியிலிருந்து விலகியவராகவே கருதப்படுவார். அதன் பின்னர் அவர் நடுநிலைமையுடைய, பக்கச்சார்பற்ற வெளிப்படையானவராகப் பாராளுமன்றத்தின் கௌரவத்தை, நாட்டின் கௌரவத்தைப் பாதுகாப்பவராக இருத்தல் வேண்டும். அத்தகைய கௌரவம், சம்பிரதாயத்தையுடைய சபாநாயகருக்கெதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. கொண்டுவரப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டது என்பது இங்கே பேச்சில்லை.

அந்தவகையில்தான், சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டதென்பது எமது நாட்டின் பாராளுமன்ற வரலாற்றில் வெட்கப்பட வேண்டிய விடயம் என பேசப்பட்டு வருகிறது.

சபாநாயகருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டதற்கான காரணங்களாக அவருடைய பக்கச்சார்பான நடவடிக்கைகள் என்று பொதுவில் சொல்லப்பட்டாலும், உடனடிக்காரணம் அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மற்றும் புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் ஆகியனவே. அவ்வளவு அவசர அவசரமாக உயர் நீதிமன்றத்தின் விதப்புரைகளையும் பொருட்படுத்தாமல் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கான காரணம்தான் என்ன என்பதே இங்குக் கேள்விக்குரியது. சட்டமாக்கப்பட்ட கையோடு அது திருத்தத்துக்குள்ளாகும் என்ற அறிவிப்பும் வெளியானது இதில் இன்னுமொரு வேடிக்கை.

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் தவிர அனைத்து அரசியல் கட்சிகள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், உள்நாட்டு மனித உரிமை அமைப்புகள், சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள், சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் என நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் தமது கவலையையும் கரிசனையையும் வெளியிட்டிருந்தனர். ஆனால், அவை எவையும் கணக்கிலெடுக்கப்படாமல் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. சபாநாயகர் கையொப்பமிட்டு சட்டமாக்கப்பட்டது.

சபாநாயகருக்கெதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின் போது, உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை அரசியலமைப்புக்கு முரணாக, உயர் நீதிமன்றத்தின் விதப்புரைகளை புறக்கணித்து தனது ஒப்பத்தை இட்டதன் மூலம் அவர் கூறும் செய்தி என்ன? 'வெஸ்ட் மினிஸ்டர்' சம்பிரதாயத்தை இதன் மூலம் எமது சபாநாயகர் அவமதித்துள்ளதுடன், அதனை முற்றாக மீறியுமுள்ளர். தென் கிழக்காசியாவில் பெருமைமிகு பாராளுமன்ற சம்பிரதாயம் கொண்ட நாட்டில், இதுவரையில் இருந்து வந்த சம்பிரதாயம் இதன் மூலம் முற்றாக மீறப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக ஜனநாயக நாட்டில் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை சமமானதும் ஒன்றையொன்று ஒப்பாரும் மிக்காரும் இல்லாததாக இருக்கவேண்டுமென்ற வலு வேறாக்கல் தத்துவம் தன் காலில் போட்டு மிதித்துள்ளார். இது எமது பாராளுமன்றச் சம்பிரதாயத்துக்குப் பெருமையா, எமது சபாநாயகருக்கு இது பெருமையா? என்றும் கேள்வி எழுப்பினர்.

அதே நேரத்தில், சட்டமா அதிபர், பாராளுமன்றச் செயலாளர் ஆகியோர் சபாநாயகருக்கு போதுமான ஆலோசனை வழங்கவில்லை. பொலிஸ் மா அதிபர் நியமனத்தின்போது அரசியலமைப்பினை சபாநாயகர் மீறியுள்ளார் போன்ற குற்றச்சாட்டுக்களும் வேறு பலராலும் முன்வைக்கப்பட்டன.

அதே நேரத்தில், சபை விவாதங்களின் போது உறுப்பினர்கள் தமது எதிர்ப்பினை வெளிக்காட்டும் போதும், ஆளும் கட்சியினை ஒரு விதமாகவும் எதிர்க்கட்சியினரை வேறுவிதமாகவுமே நடத்திச் செல்கின்ற நிலைமை காணப்படுவதாகவும் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன. முக்கியமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களது சிறப்புரிமைகள் மீறப்படுகின்ற வேளைகளில், குறிப்பாக சிறுபான்மைத் தமிழ் உறுப்பினர்களது பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறப்படும் வேளைகளில், பாராளுமன்றத்தில் எடுத்துரைக்கும் போதும், அவை முறையான கவனத்துக்கு உட்படுவதில்லை. அவர்களுக்குரிய முறையான நீதி கிடைப்பதில்லை என்றும் கருத்துரைக்கப்பட்டது. இதற்கு நல்லதோர் உதாரணம் அண்மைக் காலங்களில் வடக்கு கிழக்கில் நடைபெறுகின்ற சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

பாராளுமன்ற விவகாரங்களை விமர்சனத்துக்குட்படுத்த முடியாது என்றாலும், சில விடயங்கள் பேசப்படுவதாக மாறியிருக்கிறது. பாராளுமன்றத்தில் பல சட்ட மூலங்கள் முன்வைக்கப்படுகின்றன. விவாதங்கள் நடைபெறுகின்றன. அவைகள் யாவும் மக்கள் நலன் பேணும் நாட்டுக்கு முக்கியமானவை என்ற பாகுபாடுகளுக்கப்பால் முன்னெடுக்கப்படுகிறதா என்ற கேள்வியும் காணப்படுகிறது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட விவாதத்தின் முடிவில் நடைபெற்ற வாக்கெடுப்பில், பிரேரணைக்கு ஆதரவாக 75 வாக்குகளும், எதிராக 117 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன், 33 பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூகமளித்திருக்கவில்லை. இந்தப் பிரேரணை வாக்கெடுப்பில் யார் யாரெல்லாம் இவற்றினைச் செய்தார்கள் என்ற வாதத்துக்கு மறுபுறமாக வெறுமனே அரசுக்கெதிரான பிரேரணையாகவே இது பார்க்கப்பட்டதாகவே கொள்ளலாம். அதே நேரத்தில், அரசாங்கக் கட்சியினரால் இப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டதாகவே முடிவுக்கு வரமுடியும்.

அந்தவகையில், தோற்கடிக்கப்பட்டது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையல்ல, மாறாகப் பாரம்பரிய பெருமைமிக்க எமது பாராளுமன்ற சம்பிரதாயமும் 'வெஸ்ட் மினிஸ்டர்' சம்பிரதாயத்தில் பெருமைமிகு பதவியாகக் கருதப்பட்ட ஒரு சபாநாயகர் பதவியினையுமாகும் என்ற கருத்து நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் கொள்ளமுடியும்.

எங்களுக்குள் எவ்வாறான பிரச்சினைகள் இருந்தாலும் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் எதிர்க்கட்சிகளின் முயற்சிகள் பலனளிக்காது என்பதுவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடாக இருக்கிறது. இந்த நிலைப்பாடுதான் பாராளுமன்றத்தில் நிகழ்ந்து வருகிறது. இல்லையானால் மக்களுக்கும், நாட்டுக்கும் எதிரான பல விடயங்களுக்கு எதிர்விளைவுகள் கிடைத்திருக்கும். இது சபாநாயகருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிப்பிலும் வெளிப்பட்டிருக்கிறது. இதில் யாருக்கும் ஜனநாயகமோ, மனசாட்சியோ வாக்களித்த மக்களின் எண்ணப்பாடோ, எதிர்பார்ப்போ கணக்கிலில்லை.

சபாநாயகர் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற பேதமின்றி சபையினை நடுநிலைத் தன்மையுடனும் நீதி நெறி முறையுடனும் சபையினை வழிநடத்த வேண்டிய கடப்பாட்டுக்குரியவர். அந்த வகையில், பிரேரணை தோற்கடிக்கப்பட்ட பின்னர் உரையாற்றுகையில் அவர் தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை.

"ஜனாதிபதியின் அழுத்தத்தால் சில முடிவுகளை நான் எடுத்ததாகச் சிலர் தொடர்ந்து குற்றம் சாட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். ஜனாதிபதி எனது நீண்டகால நண்பர் என்பது உண்மையே. எவ்வாறாயினும். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில், நாங்கள் இருவரும் முற்றிலும் மாறுபட்ட இரண்டு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தோம். ரணில் விக்ரமசிங்க எனது நண்பர், நாங்கள் இணைந்து நாட்டுக்காக சில பணிகளைச் செய்திருந்தாலும், அவர் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் பெற்ற பிறகு சட்டமன்றத் தலைவர் என்ற முறையில் எனக்கு எந்த அழுத்தத்தையும் கொடுக்கவில்லை. கடந்த 40 வருடங்களாக மஹிந்த யாப்பா அபேவர்தனவாகிய நான் கொள்கைகளைத் தவிர வேறு யாருடைய அரசியல் கைக்கூலியாக இருக்கவில்லை என்பதை ஜனாதிபதி உட்பட அனைவரும் நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள். 40 வருடங்களுக்கு மேலாக எனது அரசியல் வாழ்க்கையில் நான் பெற்ற மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன்.

மூன்று நாட்களுக்கு மாத்திரம் 40 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதற்கு எனது கவலையைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் உரிமைகளை நான் முடக்கவில்லை என்பதைப் பெருமையுடன் என்னால் குறிப்பிட முடியும். இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் எனக்கு ஆதரவாகவும், எதிராகவும் வாக்களித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவரின் நம்பிக்கைக்கும் நாட்டு மக்களின் நம்பிக்கைக்கும் அமைய நான் செயற்படுவேன். சபாநாயகராக எனது அலுவலகம் அனைவருக்கும் என்றும் திறந்தே இருக்கும்" என்று தெரிவித்திருக்கிறார்.

எது எவ்வாறானாலும், சபாநாயகருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட எதிர்க்கட்சிகளின் பிரேரணையானது பாராளுமன்றத்திற்கு அவர் சபைக்குத் தலைமை தாங்க முடியாத நிலையை ஏற்படுத்தியது. ஆளும் கட்சியினரால் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் இனி வரும் காலங்களில் சபாநாயகர் பாராளுமன்ற மரபுகளைச் சரியான முறையில் கடைப்பிடிப்பதற்கான ஓர் உந்துதலை ஏற்படுத்தியிருக்கும் எனலாம்.

கடிதங்கள்

சட்ட நடவடிக்கை வேண்டும்

திருகோணமலை - மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மேன்காமம் குளத்தின் பகுதிகளை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலர், கனரக வாகனங்களை பயன்படுத்தி சேதப்படுத்தி அங்கிருக்கும் நீரை வெளியேற்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவ கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த குளத்தை நம்பி 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் 400 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆனால், இக்குளமானது நீண்டகாலமாக புணரமைக்கப்படாமலும், பெரும்பான்மை இனத்தவர்களினால் கையகப்படுத்தப்பட்டும் வருகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும், இதுவரை அவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குளத்தினை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வருகின்றவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுதுள்ளனர்.

- சஞ்சீவன் துரைநாயகம்

பெருந்தோட்ட சிறுவர்களின் கல்வியை மேம்படுத்த ஜப்பான் ஆதரவு



இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷிஹி தேகி, "Grant Assistance for Grassroots Human Security Projects (GGP)", திட்டத்தின் கீழ் மானிய உதவிக்கான ஒப்பந்தத்தில், அட்வென்டிஸ்ட் அபிவிருத்தி மற்றும் நிவாரண முகவர் அமைப்பின் (ADRA) இலங்கைக்கான பணிப்பாளர் மெத்தியுவிட்டி உடன் கைச்சாத்திட்டிருந்தார்.

நுவரெலியாவில் மின்னாஹ் தமிழ் வித்தியாலயத்தின் ஆரம்ப பாடசாலை கட்டடங்களை மேம்படுத்துவதற்கு GGP ஊடாக ADRA க்கு 70,916 அமெரிக்க டொலர்களை மொத்தமாக ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

GGP திட்டத்தினூடாகமத்தியமாகாணத்தில் 19 செயற் திட்டங்களை ஜப்பானிய அரசாங்கம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளது. இவற்றினூடாக, தேயிலைப் பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் பின்தங்கிய சமூகத்தாரின் நலன்புரி மற்றும் மனிதப்பாதுகாப்பு போன்றவற்றை மேம்படுத்துவது தொடர்பில் பிரதானமாக கவனம் செலுத்தப்படுகின்றது.

வைத்தியசாலைகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், நீர், கழிவறை வசதிகள் போன்றவற்றை மேம்படுத்துவது மற்றும் நடமாடும் நூலகங்களை நிறுவுவது போன்றவற்றை இந்தத்திட்டங்கள் கொண்டிருந்தன.

வாழ்க்கையில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு அடிப்படைக் கல்வியின் முக்கியபங்கு தொடர்பில் தூதுவர்மிசுகொஷி குறிப்பிட்டதுடன், அரசமுகவர் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றுடன் கைகோர்த்து, இலங்கையின் சுபிட்சம் மற்றும் உறுதித்தன்மைக்கு ஆதரவளிப்பது தொடர்பான அர்ப்பணிப்பை அவர் மீளுறுதி செய்திருந்தார்.

இந்தமானியத்தைப் பெற்றுக்கொண்டு, மெத்தியுவிட்டி உரையாற்றுகையில், "1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப்பாடசாலை நிர்மாணிக்கப்பட்டதுடன், தற்போது 107 மாணவர்கள் பயில்கின்றனர். இவர்களில் பெருமளவானோர் பெருந்தோட்ட பணியாளர்களின் பிள்ளைகளாவர்.

இந்தத்திட்டத்தின் கீழ் தற்போது காணப்படும் பாடசாலைக் கட்டிடங்கள் மறுசீரமைக்கப்படுவதுடன், புதியவகுப்பறைகளின் நிர்மாணம், புதியபுத்தகங்கள், தளபாடங்கள் மற்றும் நூலகமுகாமைத்துவ கட்டமைப்பைக்கொண்ட நூலகம் போன்றவற்றையும் கொண்டிருக்கும்.

பாதுகாப்பான மற்றும் போதியளவு பயிலல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்தப் பாடசாலையில் மறுசீரமைப்பு மற்றும் விரிவாக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. சமூகத்தின் சகல மாணவர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் வளமான பாடசாலை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு பிரதான நோக்காக அமைந்திருப்பதுடன், பாடசாலையில் அவர்களின் நலன் மற்றும் பயிலலை மேம்படுத்துவதும் எதிர்பார்க்கப்படுகின்றது" என்றார்.

SLT–MOBITEL 'One Shot ULTRA' ஊடாக

Unlimited Voice மற்றும் Data

SLT-MOBITEL இனால் மொபைல் பாவனையாளர்களுக்காக'One Shot ULTRA' எனும் விசேட பக்கேஜ்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

SLT-MOBITEL'இன் ஒப்பற்ற வலையமைப்பு வினைத்திறனுடன், One Shot ULTRA இனால் இலங்கையில் மொபைல் இணையத்தில் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனூடாக, பாவனையாளர்களுக்கு எந்த வலையமைப்புக்கும் unlimited voice calls வழங்கப்படுவதுடன், தடங்கலில்லாத data பாவனையும் வழங்கப்படுகின்றது. இதனூடாக, SLT-MOBITELMobile பாவனையாளர்களுக்கு ஒப்பற்ற இணைப்புத்திறன் கிடைப்பதுடன், எவ்விதமான வரையறைகளுமின்றி, எந்த அப்ளிகேஷனையும், சௌகரியமாக பயன்படுத்தும் வசதியும் வழங்கப்படுகின்றது. One Shot ULTRA உடன், SLT-MOBITEL இணைப்புத்திறனில் புதிய யுகத்தை அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக, unlimited voice மற்றும் data பகுதிகளை மீளமைத்துள்ளது.

One Shot ULTRA தற்போது 7 நாட்கள், 30 நாட்கள், 60 நாட்கள், 90 நாட்கள் மற்றும் 180 நாட்கள் செல்லுபடியாகும் தெரிவுகளில் கிடைக்கின்றன.

முற்கொடுப்பனவு இணைப்புகளுக்கான ஆரம்ப கட்டணம் ரூ. 488ஆக அமைந்துள்ளது. முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு இணைப்புகளுக்கான, 30 நாள் பக்கேஜ் ரூ 1,989, ஆக அமைந்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின்

மகளிர் தினக் கொண்டாட்டம்

கொமர்ஷல் வங்கி சர்வதேச மகளிர் தின நிகழ்வின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்திருந்த அறிவு பகிர்வு அமர்வில் 200 க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர பெண் தொழில்முயற்சியாளர்கள் (WSMEs) கலந்து கொண்டனர்.

வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, பெண் வாடிக்கையாளர்களுக்கான பிரத்தியேகமான வங்கி தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் பிரிவான 'அணகி' ஆதரவளித்தது.

இந்நிகழ்வில் பிரதம பேச்சாளராக (La Vivente (Pvt) Ltd) இன் இணை ஸ்தாபகரான கலாநிதி டிலீஷா பெரேராவும், மேலும் கலாநிதி சாரங்க அழகப்பெரும - கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) தலைவர், திருமதி நயோமினி வீரசூரிய - சற்றின் சஞ்சிகையின் ஸ்தாபகர் மற்றும் திருமதி. சேபாலிகா ஜயவர்தன - பிராந்திய அபிவிருத்தி பணிப்பாளர் - ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) ஆகியோர் குழு உறுப்பினர்களாகவும் கலந்து கொண்டனர். அறிவு-பகிர்வு அமர்வின் விளக்கக்காட்சிகள், கைத் தொழில்துறை நுண்ணறிவு, விபரங்கள் மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தை அமைப்பது தொடர்பான வழிகாட்டல், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி (SME) வர்த்தகங்களுக்கான உள்நாட்டு அதிகாரசபைகளுடனான பரிவர்த்தனைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற கேள்வி பதில் அமர்வில், அழைப்பாளர்கள் உற்சாகமாகப் பங்கேற்றனர்.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க, பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் மற்றும் சிரேஷ்ட, கூட்டாண்மை முகாமைத்துவ அங்கத்தவர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வானது பெண்களின் அதிகாரசக்திக்கு வங்கி வழங்கிய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

கொமர்ஷல் வங்கியின் அணகி மகளிர் வங்கியியல் பிரிவானது சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (IFC) இணைந்து IFC-DFAT பெண்கள் வேலைத் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு முக்கியமான சேவைப் பிரிவான பெண்களுக்கான நிதிக்கான அணுகலை அதிகரிப்பதில் நவீன நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி செயற்படுகின்றது.

ஏன் ரூபாயின் மதிப்பு உயர்கிறது

ச.சேகர்

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு கடந்த ஆண்டின் பிற்பகுதியிலிருந்து படிப்படியாக உயர்வடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. நவம்பர் மாதம் 30ஆம் திகதி அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு ரூ.329 ஆகும். இந்தப் பெறுமதி மார்ச் 22ஆம் திகதி ரூ.298 ஆக உயர்ந்திருந்தது. நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டதன் பின்னர் இலங்கை ரூபாயின் மதிப்பு உயர்வடையும் இரண்டாவது சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.

திறந்த பொருளாதாரமுறைமை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி படிப்படியாக வளர்ச்சி கண்டிருந்த போதிலும், 2022 மார்ச் மாதம் முதல் 2022 மே மாதம் வரையான பொருளாதார நெருக்கடி தோன்றிய காலப்பகுதியில், டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி ரூ.204 என்பதிலிருந்து ரூ.369 ஆக சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

அதுபோலவே, டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 2023 பெப்ரவரி மாதம் முதல் ஜுன் மாதம் வரையான காலப்பகுதியில் ரூ.364 இலிருந்து ரூ.290 ஆக உயர்ந்திருந்தது. ரூபாயின் பெறுமதியின் ஸ்திரப்படுத்தும் செயற்பாடுகளின் விளைவாக இந்நிலை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறு ரூபாயின் மதிப்பு உயர்வடைந்துள்ளமை என்பது பொருளாதார மீட்சியின் அடையாளமாக அமைந்துள்ளதாக பொதுவான கருத்துகள் காணப்படுகின்றன. அதில் ஓரளவு உண்மைத்தன்மையும் காணப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம்இ 1977ஆம் ஆண்டின் பின்னர் நடைமுறைக் கணக்கில் நேர் பெறுமதி மீதி காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைக் கணக்கில், ஏற்றுமதி வருமானம் மற்றும் இறக்குமதி செலவீனம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு, வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணம் மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் போன்ற வியாபார மீதி அடங்கியுள்ளன.

2023ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதி செலவீனம் வழமைபோல அதிகமாக காணப்பட்டது.

இதனால் வர்த்தக மீதியில் மீதியில் மறைப் பெறுமதி பதிவாகியிருந்தாலும், வெளிநாட்டு பண அனுப்புகைகள் மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் போன்றன உயர்வை பதிவு செய்திருந்தமையினால் நடைமுறைக் கணக்கில் நேர் பெறுமதி மீதியை எய்த முடிந்திருந்தது.

நிதிக் கணக்கு என்பது எவ்விதமான முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் தவணைகள், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிடமிருந்து கடன்கள், நட்பு நாடுகளிடமிருந்து கடன் உதவிகள் போன்றன கிடைத்திருந்தன. கொழும்பு பங்குப்பரிவர்த்தனை மற்றும் அரசாங்க கடன் பத்திரங்கள் சார்ந்த கொடுக்கல் வாங்கல்களினூடாக நாட்டினுள் பணப்பாய்ச்சல் காணப்பட்டது.

இவை பொருளாதார மீட்சிக்கான நேர்த்தியான அடையாளங்களாகும். மேலும் பொது மக்கள் எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடியான சூழ்நிலை காரணமாகவும், பண்டங்களின் விலை உயர்வாகக் காணப்படுகின்றமையாலும், இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் நுகர்வில் வீழ்ச்சி பதிவாகியிருக்கலாம். இதனால் இறக்குமதி செலவு குறைவதில் பங்களிப்பு வழங்கியிருக்கும்.

சந்தையினுள் வரும் டொலர்களின் எண்ணிக்கை, வெளிச்செல்லும் டொலர்களை விட உயர்வாக இருந்தமையினால், சந்தையில் டொலர்களின் மிகை நிலை காணப்பட்டது. இதனால் சந்தையில் டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த வீழ்ச்சியை கட்டுப்படுத்துவதற்காக சந்தையில் மிகையாக காணப்படும் டொலரை இலங்கை மத்திய வங்கி கொள்வனவு செய்து, தனது இருப்பை உயர்த்தியிருந்தது. இவ்வாறு 2023ஆம் ஆண்டின் இறுதியில் அந்நியச் செலாவணி இருப்பு 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்திருந்தது. இதில் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இவ்வாறு சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகும்.

இலங்கை ரூபாயின் மதிப்பு உயர்வடைவதற்கான காரணம் இதுவாகும். எவ்வாறாயினும், உண்மை நிலை இதுவல்ல. தற்போதும் நாட்டில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. ஏற்றுமதியில் ஈடுபடுவோர் தமது டொலர் வருமானங்களை உடனடியாக ரூபாயாக மாற்றிக்கொள்ள வேண்டும் எனும் விதிமுறை காணப்படுகின்றது. நாடு பெற்றுக்கொண்ட சர்வதேச கடன்களை மீளச் செலுத்த ஆரம்பிக்கவில்லை.

எனவே, சந்தையில் ஏற்பட்டுள்ள டொலர் மிகை என்பது உண்மையான நிலைவரம் அல்ல. சந்தையிலிருந்து சில காரணிகள் பலவந்தமாக கட்டுப்படுத்தப்படுகின்றமை இந்த பெறுமதி வீழ்ச்சியில் பங்களிப்புச் செலுத்துகின்றது. இந்தக் காரணிகளும் தளர்த்தப்படும்போது, இலங்கை ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைவதற்கு அதிகளவு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இலங்கையில் நுகர்வோர் பொருட்கள், இடைப்பாவனை பொருட்கள் மற்றும் மூலதன பொருட்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் இல்லை. டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு உயர்ந்திருந்த போதிலும், இறக்குமதி செய்யப்படும் நுகர்வோர் பொருட்களில் இதுவரையில் விலைக்குறைப்பு ஏற்படுத்தப்படவில்லை. பால்மா விலையில் மாத்திரம் விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறிப்பாக, நாட்டில் பொது மக்களின் வாழ்க்கைச் செலவில் பிரதான தாக்கம் செலுத்தும் காரணியான எரிபொருள் விலைகள் குறைக்கப்படவில்லை. சர்வதேச சந்தையில் கடந்த மாதம் நிலவிய எரிபொருள் விலை உயர்வுகள் மற்றும் ஜனவரி மாதம் முதல் எரிபொருள்கள் மீது பெறுமதி சேர் வரி பிரயோகிக்கப்பட்டுள்ளமை போன்றன இத்தத் தீர்மானத்தில் தாக்கம் செலுத்தியிருக்கலாம்.

நாட்டின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அதிகரிக்கப்படுவதுடன், ரூபாயின் மதிப்பு உயர்வடைந்தால், அது இயற்கையானது. தற்போதைய நிலை மிகவும் தற்காலிகமானதாகும். எதிர்காலத்தில் இறக்குமதிகள் கட்டுப்பாடுகள் மேலும் தளர்க்கப்பட்டதும், பெற்ற கடன்களை மீளச் செலுத்த ஆரம்பித்ததும், இந்த நிலை மாறும். ரூபாய்க்கு நிகரான டொலரின் பெறுமதி அதிகரிக்கும்.

தற்போதைய பொருளாதார மீட்சி என்பது வெறும் மாயக் கதை, விரைவில் நாம் மீண்டும் பின்நோக்கி செல்வோம் என்றவாறான கருத்துகள் பகிரப்படுகின்றன. முறையாக பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்படாவிடின், நாட்டின் பின்நோக்கிய நகர்வை தடுக்க முடியாது. நாட்டினுள் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதுடன், அது சார்ந்த வருமதி அதிகரித்துள்ளது மற்றும் வெளிநாடுகளில் பணியாற்றுவோர் அனுப்பும் பணத்தொகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. குறுகிய கால அடிப்படையில் இந்த இரு துறைகளினூடாகவும் நாட்டினுள் அந்நியச் செலாவணி வரத்து அதிகரிக்கும்.

ஆயினும், தேர்தல்கள் தொடர்பில் பேசப்படும் நிலையில், கடந்த காலங்களைப் போன்று, மக்கள் மத்தியில் பிரபல்யமடைவதற்காக நிவாரணம் வழங்குகின்றோம் எனும் போர்வையில், மீண்டும் நாட்டை பின்தள்ளும் தீர்மானங்களை அதிகாரத்திலுள்ளவர்கள் மேற்கொள்ளாமல் இருந்தால் நன்று.

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

ரஷ்ய பயங்கரவாத தாக்குதல்

உயிரிழப்பு அதிகரிப்பு

ரஷ்யா

ரஷ்யாவில் நடைப்பெற்ற இசை நிகழ்ச்சியில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் உயிரிழப்பு மேலும் அதிகரித்து வருகிறது. இதுவரையில் 133 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்ய தலைநகரில் உள்ள கிராஸ்னோகோர்க் நகரில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற இசை நிகழ்ச்சியின்போதே இத்தாக்குதல் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

அப்போது அங்கு நுழைந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் கண்ணில் பட்டவர்களை எல்லாம் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டு வீழ்த்தினர்.

அத்துடன் அந்த இடத்தில் வெடிகுண்டு, பெற்றோல் குண்டு வீசியதில் தீ விபத்தும் ஏற்பட்டது. இத் தாக்குதலில் 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா

இரண்டு மாதங்களில்

3,000 வாகனங்கள் கொள்ளை

ஆயுத முனையில் வாகனக் கொள்ளைச் சம்பவங்கள் கனடாவில் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒன்றாரியோவில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், வாகனக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 31 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஒன்றாரியோ, மொன்றியால் பொலிஸார் இந்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பந்தோட்டை

பலதார மணம் செய்து பண மோசடி

பல பெண்களை திருமணம் செய்து கொண்டு பண மோசடியில் ஈடுபட்டதாக மிஸ்டர் வேர்ல்ட் பட்டம் பெற்ற ஒருவர் மீது வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே பிணையில், வெளிவந்திருந்த அவர் மீது மேலும் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர், 2019இல் ஒரு பெண்ணை திருமணம் செய்திருந்தார், 2021இல் மற்றுமொரு பெண்ணுடன் நெருங்கிப் பழகி பண மோசடியில் ஈடுபட்டக குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், கடந்த 2022ஆம் ஆண்டு பிணையில் வெளியே வந்தவர். தனது லீலைகளை மீண்டும் காண்பிக்க தொடங்கினார். முதலில் திருமணம் செய்திருந்த பெண் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் மிரட்டல், மோசடி, நம்பிக்கை மோசடி உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும், அவர் தலைமறைவாகிவிட்டார். அவரை பொலிஸார் வலை வீசி தேடிவருகின்றனர்.

மதுரவாயல்

பொலிஸ் தாக்கியதில் ஓட்டுநர் உயிரிழப்பு

சென்னையில் ஓட்டுநரை பொலிஸ் தாக்கியதில் ஓட்டுநர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சென்னை - மதுரவாயல் பகுதியில் வாகன ஓட்டுநர் ஒருவர் கடந்த 21ஆம் திகதி இரவு பெண்ணொருவருடன் வீதியில் நின்று பேசிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அங்கு வந்த தலைமை பொலிஸ் அதிகாரி வாகன ஓட்டுநரிடம் விசாரித்தபோது, இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து ஓட்டுநரை பொலிஸ்காரர் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான அவர், மயங்கி கீழே விழுந்த நிலையில், அவருடன் இருந்த பெண், நண்பர்களுக்கு தகவல் கொடுத்ததையடுத்து, ஓட்டுநர், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஆனால், அவர் வழியிலேயே உயிரிழந்துவிட்டதாக அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணையில், பொலிஸ் தாக்கியதில் ஓட்டுநர் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து, பொலிஸ்காரர் கைது செய்யப்பட்டதோடு, பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சென்னை

"சின்னமல்ல எண்ணம் முக்கியம்"

சீமான் விடுத்துள்ள கோரிக்கை

"சின்னத்தைப் பார்த்து வாக்கு செலுத்தும் முறையை கைவிட்டு, நல்ல எண்ணத்தை பார்த்து வாக்களிக்கின்ற நிலையை உருவாக்குங்கள்" என வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் சீமான் கோரினார்.

சென்னை பல்லாவரம் துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் நாம் தமிழர் கட்சி சார்பில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் 40 வேட்பாளர்களையும் ஒரே மேடையில் அறிமுகப்படுத்தும் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. இதில் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 'நாங்கள் அரசியல் செய்ய வந்தது என் மக்களை வைத்து பிழைக்க அல்ல, என் மக்களுக்காக உழைக்க, களத்தில் நிற்பது கேடுகெட்ட பணநாயகத்தை ஒழித்து மாண்புமிக்க ஜனநாயகத்தை காக்க, சின்னம் வைத்திருக்கிற கட்சிகளை விட சின்னமே இல்லாமல், சின்னமே எதுவென்று தெரியாத கட்சி துடிப்போடும் வெறியோடும் களத்தில் நிற்கிறது" என்றும் குறிப்பிட்டார்.

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

வெற்றியை நோக்கிப் பயணிக்கும் இலங்கை

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் வெற்றியை நோக்கி இலங்கை பயணிக்கிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், சியல்ஹெட்டில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இலங்கை, கலீல் அஹ்மட் (3), ஷொரிபுல் இஸ்லாம், அறிமுக வீரர் நஹிட் ரானா (3), தஜியுல் இஸ்லாமிடம் குறித்த இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்தபோதும் அணித்தலைவர் தனஞ்சய டி சில்வா, கமிந்து மென்டிஸின் தலா 102 ஓட்டங்களால் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், விஷ்வ பெர்ணாண்டோ (4), லஹிரு குமார (3), கசுன் ராஜிதவிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 188 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் தஜியுல் இஸ்லாம் 47, லிட்டன் தாஸ் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கமிந்து மென்டிஸின் 164, டி சில்வாவின் 108, திமுத் கருணாரத்னவின் 52, பிரபாத் ஜெயசூரியவின் 25 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 418 ஓட்டங்களைப் பெற்று 511 ஓட்டங்களை பங்களாதேஷுக்கு வெற்றியிலக்காக நிர்ணயித்தது. பந்துவீச்சில், மெஹிடி ஹஸன் மிராஸ் 4, ரானா மற்றும் தஜியுல் இஸ்லாம் 2, ஷொரிஃபுல் இஸ்லாம், கலீல் அஹ்மட் ஆகியோர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ், விஷ்வ பெர்ணாண்டோ (3), கசுன் ராஜித, லஹிரு குமாரவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறி வருகிறது. தற்போது களத்தில் மொமினுல் ஹஸன் ஏழு ஓட்டங்களுடனும், தஜியுல் இஸ்லாம் ஆறு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

சிநேகபூர்வப் போட்டிகள்:

பிரான்ஸை வீழ்த்திய ஜேர்மனி

இங்கிலாந்தை வென்ற பிரேஸில்

சிநேகபூர்வப் போட்டிகளில், தம் நாட்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஜேர்மனியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் தோற்றது.

ஜேர்மனி சார்பாக, புளோரியன் ரிட்ஸ், கை ஹவேர்ட்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, இங்கிலாந்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பிரேஸில் வென்றது. பிரேஸில் சார்பாகப் பெறப்பட்ட கோலை என்ட்ரிக் பெற்றிருந்தார்.

இந்நிலையில், எகிப்தில் நடைபெற்ற குரோஷியா, துனீஷியாவுக்குமிடையிலான போட்டியானது வழமையான நேரத்தில் 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்த நிலையில், பெனால்டியில் 5-4 என்ற ரீதியில் குரோஷியா வென்றது.

இதேவேளை டென்மார்க்கில் நடைபெற்ற அவ்வணிக்கும், சுவிற்ஸர்லாந்துக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்நிலையில், தம் நாட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பெல்ஜியத்துடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்து சமப்படுத்தியது.

ஐ.பி.எல்: ஹைதரபாத்தை வென்ற கொல்கத்தா

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), கொல்கத்தாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஹைதரபாத்

கொல்கத்தா: 208/7 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: அன்ட்ரே ரஸல் ஆ.இ 64 (25), பில் ஸோல்ட் 54 (40), ரமன்டீப் சிங் 35 (17), ரிங்கு சிங் 23 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: தங்கராசு நடராஜன் 3/32 [4], பற் கமின்ஸ் 1/32 [4])

ஹைதரபாத்: 204/7 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் 63 (29), அபிஷேக் ஷர்மா 32 (19), மாயங்க் அகர்வால் 32 (21), ஷபாஸ் அஹ்மட் 16 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுனில் நரைன் 1/19 [4])

போட்டியின் நாயகன்: அன்ட்ரே ரஸல்

இதேவேளை முல்லன்பூரில் நடைபெற்ற மற்றைய போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை பஞ்சாப் கிங்ஸ் வென்றிருந்தது.

இந்நிலையில், பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கிங்ஸை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு எதிர்கொள்ளவுள்ளது.

இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருக்காக

ஓய்விலிருந்து வெளியே வந்த இமாட் வசீம்

இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்தான தனது ஓய்வை பாகிஸ்தானின் சகலதுறைவீரர் இமாட் வசீம் நேற்று முன்தினம் மீளப் பெற்றுக் கொண்டமையையடுத்து இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான தெரிவுக்கு மீண்டுமொரு முறை தயாராகியிருக்கிறார்.

இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடர் வரை மாத்திரமே தனது ஓய்வை மீளப்பெற்றுள்ள வசீம், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார் என எதிர்பார்க்கப்படவில்லை.

அவுஸ்திரேலிய குரான் பிறீ:

வென்ற கார்லோஸ் சைன்ஸ்

அவுஸ்திரேலிய குரான் பிறீயானது நேற்று நடைபெற்ற நிலையில், பெராரி அணியின் கார்லோஸ் சைன்ஸ் ஜூனியர் வென்றார். பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த ஸ்பெய்னின் சைன்ஸ், ஆரம்பத்திலேயே பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த நடப்புச் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பனை முந்தியே வென்றிருந்தார். இரண்டாமிடத்தை சைன்ஸின் சக பெராரி அணி வீரரான சார்ள்ஸ் லெக்கலெர்க்கும், மூன்றாமிடத்தை மக்கலரென் அணியின் லான்டோ நொரிஸும் பெற்றனர்.

இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 51 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றெட் புல் அணியின் வெர்ஸ்டப்பன் காணப்படுகிறார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 25 மார்ச் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.